# ஆஸ்திரேலிய பிரதமரை திடீரென காணவில்லை

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

மலர் 9
இதழ் 309

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க மார்கழி 3 ரம்ழான் 15 திங்கட்கிழமை (18-12-67)

## மீன்பிடிக்கச் சென்றவர் கதி என்ன?

கான்பெரா, டிசெ. 17 ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹரோல்ட் ஹோல்ட்டைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. ஹோல்ட் தமது நண்பர்கள் நால்வர்களுடன் இன்று காலை ஒரு மீன்பிடிப் பிரயாணத்தில் புறப்பட்டுச் சென்றதாகவும், பின்னர் அவரைக் காணவில்லையென்றும் கூறப்படுகிறது.

விக்டோரியா கடற்கரையிலுள்ள தமது வீட்டிலிருந்து புறப்பட்ட திரு. ஹோல்ட் தமது நண்பர்களுடன் பொழுதுபோக்கிற்காக மீன்பிடிப்பதற்காக விக்டோரியா கடற்கரைக்குச் சென்றுராம். திருமதி ஹோல்ட் மெல்போர்ன் சென்றிருக்கிறார்.

பிரதமரைக் கண்டுபிடிக்கப் பெரிய அளவிலான வான, கடல், நிலத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கான்பெராவில் பூரண பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருப்பதுடன்,

(5-ம் பக்கம் பார்க்க)

# நெஸ்பிரே, ஹோர்லிக்ஸ், மல்லி பெருமளவில் வெளிவந்தது

## ஊர்காவற்றுறையில் பதுக்கல் வேட்டை

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறைப்பகுதியில் நேற்று நடந்த பதுக்கல் வேட்டையில், நெஸ்பிரே, ஹோர்லிக்ஸ், மல்லிமூடைகள் சிக்கின. நெசவு நிலையத்திலும், பூட்டப்பட்டிருந்த வீடுகளிலும் இப்பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இப்பொருட்கள் உடனடியாக ஊர்காவற்றுறையில் பொதுமக்களுக்குகட்டுப்பாட்டு விலையில் பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்டன

25 நெஸ்பிறே டின்கள், 40 ஹோர்லிக்ஸ் போத்தல்கள், ஐந்தரைமூடை மல்லி ஆகியவற்றை விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்கள் கைப்பற்றினர், இவற்றிற்கு எவரும் உரிமை கோராததால் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. மழையையும் பொருட்படுத்தாது நீண்டநேரம் கியூவில் நின்று இப்பொருட்களைமக்கள் வாங்கிச்சென்றனர்.

விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. ஏ, மார்க்கண்டு உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகள் திரு. சிறில் ஜெயசூரியா, திரு. ஜெயசேகரா ஆகியோர் இந்த திடீர் வேட்டையில் இறங்கினார்கள்.

ஊர்காவற்றுறையில் சில வீடுகளிலும். கட்டுப்பாட்டு விலைப்பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, சோதனைகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த திடீர் வேட்டையில் கொள்ளை லாபமடித்த ஐந்து வர்த்தகர்களும் சிக்கியுள்ளனர். இந்த வர்த்தகர்கள்மீது வழக்குத்தாக்கல் செய்யப்படும்.

உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எம். வீரசிங்கத்தின் உத்தரவைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் எங்கும் திடீர் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

[6-ம்பக்கத் தொடர்ச்சி]

## 2-வது சடலமும் கிடைத்தது

இமையாணன், திங்கள் நேற்று முன்தினம் தொண்டமானாறு 'உப்புமால்' கடலில் குளிக்கச் சென்று காணாமல்போன இரண்டு வாலிபர்களின் சடலங்களும் கருமை நிறமடைந்தநிலையில் கற்பார்களிடையே ஒதுக்கப்பட்டிருந்தபோது கண்டெடுக்கப்பட்டுள்ளன. நேற்றுத் தொடக்கம் இன்றுவரை கடுமையான தேடுதலின் பின் சோதிலிங்கம் என்பவரின் சடலம் அதிகாலையிலும், பாலேந்திரம் என்பவரினது சடலம் நண்பகல் சுமார் இரண்டு மணியளவிலும் கண்டெடுக்கப்பட்டன.

## 'நாவலரை மறந்ததேனோ?'

### அண்ணாவிடம் நாவலர் நூற்றாண்டுசபை கேட்கிறது

யாழ்ப்பாணம், திங்

''சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய நாவலர் பெருமானுக்குச் சென்னையில் நடைபெறவிருக்கும் சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டில் சிலை எடுக்காதது பெருந் தவறாகும்.''

இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டு விழாச்சபைக் காரியதரிசி திரு. க. கி. நடராசன் சென்னை முதலமைச்சர் திரு சி.என் அண்ணாதுரைக்கு அனுப்பிய தந்தியில் தெரி

6-ம் பக்கம் பார்க்க

## பெரியபுராணத்தில் பரீட்சைமூலம்போட்டி

### தங்கப்பதக்கம், பரிசுகள் வழங்க சேக்கிழார்மன்றம் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் சைவ மாணவர்களிடையே சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணப் படிப்பைத் தூண்டுவதற்கு, வருடந்தோறும் பரீட்சை மூலம் போட்டி நடாத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், பரிசில்களும், நற்சாட்சிப்பத்திரங்களும் வழங்குவதென அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் தீர்மானித்துள்ளது.

முதலாவது போட்டி. 1968ம் ஆண்டு மே மாதம் ஜீ. சீ. ஈ. [சாதாரண, உயர்தர] வகுப்புகளில் படிக்கும் வடமாநிலச் சைவ மாணவர்களிடையே நடைபெறும்

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்று அரசாங்க அதிபர் மகாநாடு

யாழ்ப்பாணம், திங்.

அரசாங்க அதிபர்கள்மகாநாடு இன்று கொழும்பில் நடைபெறும். இம்மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கொழும்பு சென்றுள்ளார்.

உள்நாட்டு அமைச்சர் திரு. டபிள்யு. தகநாயக்கா கூட்டும் இம்மகாநாட்டில் வெள்ள அகதிகள் பற்றியும் வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகள்பற்றியும், ஆராயப்படுமெனத் தெரியவருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர்ச்சேதங்கள் பற்றியும் ஆராயப்படுமென்று தெரியவருகிறது.

நாடுபூராவிலும் நடைபெற்றுவரும், பதுக்கல் கொள்ளைலாப வேட்டைகள் பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்படுமென்றும் அறியப்படுகிறது,

## நெஸ்பிரே விற்பனை

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று சில கடைகளில் நெஸ்பிரே விற்பனை செய்யப்பட்டன. ஒவ்வொரு கடையிலும் மிகவும் நீளமான 'கியூ'க்கள் காணப்பட்டன.

சிலர் டெலிபோன் மூலம் கடை முதலாளிக்கு அறிவித்துவிட்டு, 'கியூ'வில் நிற்காமல் 'நெஸ்பிரே' வாங்கிச் சென்றதாகத் தெரியவருகிறது.

பெண்களுக்கான 'கியூ'வில் மிகக் குறைவவானவர்களே காணப்பட்டனர். மாணவர்கள் அதிகமாக 'கியூ'வில் நின்றனர்.

### பிரெஞ்சு நிபுணர் ஆராய்ச்சி

## புங்குடு தீவிலும் பெற்ரோல் ஊறுவதாகக் கண்டுபிடிப்பு

### பிரான்ஸுக்கு மண், கல் போகிறது

காங்கேசன்துறை, ஞாயிறு வடபகுதியின் பல்வேறு இடங்களிலும் கடந்த பல மாதங்களாக பெற்ரோல் எண்ணெய் வள ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் பிரெஞ்சு நிபுணர்கள் செம்பியன்பற்று என்னுமிடத்தில் ''மாமுனை''ப் பகுதியிலும் ''குடாரப்பு'', புங்குடுதீவு ஆகிய பகுதிகளிலும் பெற்ரோல் 12,000 அடி ஆழத்தில் ஊறுவதாகக் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிகிறது.

அண்மைக் காலத்தில் நடத்திய ஆராய்ச்சியில் மன்னாரை அடுத்த உயிலங்குளத்திலும் பெற்ரோல் ஊறுவதாக பிரெஞ்சு நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். பிரெஞ்சு நிபுணர்கள் இலங்கை வருமுன் இவ்விடத்தில் இலங்கை பூகற்ப நிலவியல் ஆராய்ச்சிப் பகுதியினர் ஆராய்ச்சி நடத்தி அதில் வெற்றியாலே பிரெஞ்சு நிபுணர்கள் இங்கு அழைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

பிரெஞ்சு நிபுணர்களான பிறயோன், மொறிஸ், ஒப்சேவர் லராயர் ஆகிய மூவரும் ஜனவரி 15-ம் திகதி நாடு திரும்புவர். ஒட்டா மட்டும் இங்கு தங்குவார். பிரெஞ்சிலிருந்து இவர்களை

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பணிவுடனிருங்கள். எல்லா உயிர்களையும் மானசீகமாக வணங்குங்கள். பகட்டு, செருக்கு, வெளிவேடம் ஆகியவற்றை அகற்றுங்கள்.
— சுவாமி சிவானந்தா

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 3ம் திகதி [18-12-67]

## நாவலருக்கு சிலை

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டையொட்டி தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் தமிழ் அறிஞர்கள், தமிழ் வளர்த்த, தமிழுக்குத் தொண்டாற்றிய பெரியார்கள் பலருக்கு சிலைஎடுக்கத்தீர்மானித்து அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் திரு. அண்ணுதுரையின் சிலையும் சென்னை நகரில் ஓர் இடத்தில்நிறுவப்படவிருக்கிறது. போப்பையர், கால்டுவல் ஆகியோருக்கும் சிலை எடுக்கப்படவிருக்கிறது. ஆனுல் 'நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே?...' என்று அவருக்குப் பின் வந்த அறிஞர்கள் ஏற்றிப் போற்றும்; தமிழுக்கு வசனநடை தந்த வல்லோன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குச் சிலை எடுக்க மறந்தது தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்துக்கும் கவலைதரக்கூடிய விஷயம். ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை நூற்ருண்டுவிழாச்சபையினரும், நடைமுறைத் தமிழ் இயக்கத்தினரும் நாவலருக்குச் சிலைஎடுக்க மறந்தது பற்றி தமிழக முதல் அமைச்சருக்கு தந்தியும் மகஜரும் அனுப்பி நினைவூட்டியிருக்கின்றனர். நியாயமான இந்தக் கோரிக்கையை தமிழக முதல் அமைச்சர் ஏற்றுக்கொண்டு, தவறைத் திருத்த நடவடிக்கைஎடுப்பாரென எதிர்பார்க்கலாம்.

பதினெரு பேருக்குச் சிலை எடுக்கத்தீர்மானித்தவர்கள் நாவலருக்குச்சிலை எடுக்க முன்வராதது வேண்டுமென்றே செய்த ஒரு காரியமாகக் கருத முடியாது. தவறுதலாகவே இது நேர்ந்திருக்க வேண்டும். இத்தவறை இப்போது எடுத்துக்காட்டியிருப்பவர்கள், இன்னும் கொஞ்சம்விழிப்புடனிருந்திருந்தால் தக்க சமயத்திலேயே நாவலர் சிலைபற்றி தமிழகஅரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கலாம். தமிழுக்குத் தொண்டாற்றிய, தமிழ்மொழி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பலருக்கு சிலைஎடுக்கத்தீர்மானித்தபோது ஆறுமுக நாவலரை நினைவுகொள்ளத் தவறியது வியப்புக்குரியது மட்டுமன்றி வேதனையுமளிப்பதாகும். இத்தவறை அவர்கள் திருத்திக் கொள்வார்களென நம்புவோம்.

தமிழக அரசாங்கத்தின் மீதோ, தமிழாராய்ச்சி மகாநாட்டு அமைப்பாளர் மீதோ குறைகூறுவதற்குமுன் 'நாம் என்ன செய்தோம்?' என்பது பற்றியும் சிந்திப்பது நல்லது.

இலங்கையில் இதுவரை எந்த ஓர் இடத்திலாவது நாவலர் பெருமானுக்குச் சிலை எடுத்திருக்கிருேமா? இங்கு தமிழ் வளர்ச்சிக் கழகங்கள், சங்கங்கள்எத்தனையோ இருக்கின்றன. சைவபரிபாலனசபை, இந்துமாமன்றம் முதலிய பல சங்கங்கள், சபைகள் இருக்கின்றன. நாவலருக்கு சிலை எடுப்பதெனவும் அதை யாழ்ப்பாணப் பொதுஜன நூல்நிலையக் கட்டடத்துக்கு அருகில் வைப்பதெனவும் ஏதோ ஒருசபை எப்போதோஒரு தீர்மானம் நிறைவேற்றியதாக ஞாபகம் ஆனுல் நாவலர் சிலை மட்டுமஇன்னும் இங்கு எந்த இடத்திலும் காட்சியளிக்கவில்லை.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு அமைப்பாளர்களும், தமிழகஅரசும் நாவலரை மறந்துவிட்டதாகக் கூறினுல் போதாது; நாவலர் பிறந்தநாட்டிலேயே அவருக்குச் சிலைவடித்து அவரைநினைவில் கொள்ள வேண்டியது அவசிசம்.

# உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சிறப்பு அம்சங்கள்

## அமைச்சர் கருணுநிதி அறிவிப்பு

சென்னை மாநகரத்தில் புத்தாண்டு ஜனவரி 3-ம் திகதி ஆரம்பமாகி 11-ந் திகதிவரை நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத தமிழாராய்ச்சி மகாநாட்டு சிறப்பு அம்சங்களை தமிழக பொதுப் பணிஅமைச்சர் திரு. மு. கருணுநிதி அறிவித்துள்ளார்.

கருத்தரங்கு 3-ம் திகதி தொடங்குகிறதெனினும் புத்தாண்டு முதல்நாளிலேயே முதல்வர் அண்ணுதுரை திருவுருவச்சிலையை திரு. ஏ. ராமசாமி முதலியார் திறந்துவைக்கிருர். ஜனவரி 2-ந் திகதி மாலை 6-30 மணிக்குக் கடற்கரையில் சிலைகளெடுக்கும் விழா நடைபெறும். திருவள்ளுவர் சிலையை கல்விஅமைச்சர் திரு. நெடுஞ்செழியன் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் திறந்துவைக்கிருர் ஔவைப் பெருமாட்டியின் சிலையை செய்திஅமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமையில் திரு. எஸ்.எஸ். வாசன் எம். பி. திறந்து வைக்கிருர். கவியரசர் கம்பர் சிலையை வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கோவிந்தசாமி தலைமையில் முன்னுள் முதல்வர் பெரியவர் திரு. எம். பக்தவத்சலம் திறந்துவைக்கிருர். அருந்தமிழ் வளர்த்த ஆங்கில நாட்டுப பெரும் புலவர் ஜி. யு. போப்பின் சிலையை அவைத் தலைவர் திரு. ஆதித்தஞர் தலைமையில் திரு. பிஷப் நியூபிகின் திறந்துவைக்கிருர். திராவிடமொழியின் ஒப்பிலக்கணம் வகுத்த அயர்லாந்து நாட்டு ஆங்கில புலவர் கால்டுவெல்லின் சிலையை மேல்சபைத் தலைவர் திரு. எம். மாணிக்கவேலர் தலைமையில் திரு. க. அப்பாத்துரையார் திறந்துவைக்கிருர். பாரதியின் சிலையை சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். மாதவன் தலைமையில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கஞர் திறந்துவைக்கிருர். பாரதிதாசன் சிலையை உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமி தலைமையில் பேராசிரியர் டாக்டர் வரதராஜஞர் திறந்துவைக்கிருர். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. யின் சிலையை உணவுஅமைச்சர் திரு. மதியழகன் தலைமையில் டாக்டர் பி. டி. ராஜன் திறந்துவைக்கிருர். வீரமாமுனிவரின் சிலையை பொதுநல அமைச்சர் திரு. சாதிக்பாட்சா தலைமையில் அர்ச் பிஷப் அருள் திரு. அருளப்பா திறந்துவைக்கிருர். கற்புக்கரசி கண்ணகியின் சிலையை சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சி. திறந்துவைக்கிருர்.

பாண்டியர், சோழர், சேரர் ஆண்டிருந்த அந்நாளை நினைவுறுத்தும்வகையில் பவனியொன்று 3-ம் திகதி தலைநகரில நடைபெறும். 26 அலங்கார வண்டிகள் கலந்துகொள்ளும்.

ஊர்வலத்தின் நீளம் ஏறக்குறைய முக்கால் மைல் இருக்கும். பொது மக்கள் சாலையின் இரு மருங்கிலும் நின்று பார்க்கத்தக்க அளவுக்கு வசதியும் கட்டுக்கோப்பும் பாதுகாப்பும் காவல்துறையினரால் செய்யப்பட்டு வருகின்றன.

மாலை 6-30 மாணிக்கு உலகத் தமிழ் மகாநாட்டின் தொடக்கவிழா நடைபெறும். ராஷ்டிரபதி டாக்டர் ஜாகீர் ஹுஸேன் உலகத் தமிழ் மகாநாட்டுத் தொடக்கப் பேருரையை நிகழ்த்துவார். கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் மகாநாட்டு மலரினை வெளியிடுவார். மகாநாட்டின் வரவேற்புக் குழுவின் துணைத்தலைவர் திரு. நெடுஞ்செழியன் வரவேற்பார். பன்னுட்டறிஞர் தமிழ் ஆராய்ச்சிக் குழுவின் சார்பில் பேராசிரியர் பில்லியோசா வரவேற்பு நல்லுரையை வழங்கிடுவர். திருக்குறள் ஆராய்ச்சியின் வாயிலாக பழந்த தமிழக கலை, பண்பாடு ஆராய்ச்சிகளைப் பல்கலைக்கழகங்களின் நடத்திடும். அண்ணுமலை பல்கலைக் கழகத்திற்கான நிதியை உணவு அமைச்சர் திரு. மதியழகனும், மதுரை பல்கலைக்கழகத்திற்கான நிதியை உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமியும் அளிக்கிருர்கள். சென்னை பல்கலைக்கழகத்திற்கான நிதியை திரு. கருணுநிதி அளிப்பார். இசையரசு தண்டபாணி தேசிகர் தேசியகீதமிசைப்பார். திரு. அண்ணுதுரை தலைமை தாங்குவார்.

3-ந் திகதி கண் காட்சியை டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் ராஜாஜி திறந்துவைக்கிருர். அவ்வமயம் மகாநாட்டிற்கென மத்திய அரசு அஞ்சல் தலை திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் முன்னிலையில் வெளியிடப்படும்.

4-ந் திகதி பல்கலைக்கழக நூற்ருண்டுவிழா மண்டபத்தில் கருத்தரங்கு தொடங்கும். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து 28 பிரதிநிதிகளும், இலங்கையிலிருந்து 12 பிரதிநிதிகளும், தமிழ்நாட்டிலிருந்து 150 பிரதிநிதிகளும், தமிழ்நாடு நீங்கிய ஏனைய இந்திய மாநிலங்களிலிருந்து 20 பிரதிநிதிகளும், அமெரிக்கா, இலங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மனி பிரான்ஸ் முதலிய வெளிநாடுகளிலிருந்து சுமார் 100 பிரதிநிதிகளும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேராசிரியர் பில்லியோசா தலைமையில் ஒவ்வொரு நாளும் காலை 9 லிருந்து மாலை 5 மணியளவில் 11-ந் திகதி முடியத் தமிழாராய்ச்சி பற்றிய உரைகள் ஆற்றுவர்.

கருத்தரங்கினையொட்டி ஏழு நாட்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளத்தக்கவகையில், பெரியதோர் தமிழ்விழா நடக்கும்.

4-ந் திகதி பேராசிரியர் திரு. அன்பழகன் தலைமையில் திரு. கருத்திருமகன் தொடக்கவுரை. 5-ந் திகதி மாநாட்டில் குன்றக்குடி அடிகளகர் தொடக்கவுரை. புலவர் கோவிந்தன் தலைமை 6-ந் திகதி திரு. சா. கணேசன் தொடக்கவுரை. தலைமை நீதிபதி திரு. எம். அனந்தநாராயணன் தலைமை. 7-ந் திகதி நாஞ்சில் மனேகரன் தலைமை. திரு. என். வி. நடராசன் தொடக்கவுரை. 8-ந் திகதி திருமதி ராதா தியாகராசன் தொடக்கவுரை. திருமதி செ. சௌந்திரம் கைலாசம் தலைமை. 9-ந் திகதி திரு. முகம்மது இஸ்மாயில் தலைமை. திரு. இரா. செழியன் தொடககவுரை. 10-ந் திகதி அவ்வை துரைசாமிபிள்ளை தலைமை. பேராசிரியர் மா. கி. தசரதன் உரை.

## இன்றைய பலன்

18-12-67
திங்கட்கிழமை
மார்கழி மீ 3 உ

நட்சத்திரம்- திருவாதிரை மாலை 5-47 மேல் புனர்பூசம்.
திதி- துதியை
சுபநேரம்- 12-23—1-53.
ராகுகாலம்- 7-53—9-23.
மேஷம்- நல்ல திருப்பம், நலன்கள் பெருகும்.
ரிஷபம்- அடுத்துக் கெடுப்பர், அவதானம் வேண்டும்.
மிதுனம்- கனக்கும் நெஞ்சம், கவலை பின் தாக்குதல்.
கடகம்- அதிகாரப் பேறு, அதிர்ஷ்டமுண்டு,
சிம்மம்- சகோதர சுகக் குறைவு, சஞ்சல மிகுதி.
கன்னி- துணிவு பிறக்கும், துயரம் பறக்கும்.
துலாம்- கை நிறையப் பணம், காத்திருக்கும் உறவு.
விருச்சிகம்- ஆணவப் பேச்சு, ஆபத்தில் முடியும்.
தனுசு- உள்ளமும் துள்ளும், உண்மையும் வெல்லும்.
மகரம்- அலைச்சல்மிகுதி அற்ப லாபம்.
கும்பம்- தந்தை வழி நலன், தனமுமுண்டு.
மீனம்- தொழிற் பெருமை, துன்பம் மடியும்.

[illegible]

## பூஜை வைத்து வெளியேறினர்

தருமபுரம், ஞாயிறு சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினுல் 500 மக்கள்வரை தருமபுரம் 2ம் இலக்கப் பாடசாலையில் தஞ்சம் புகுந்துகொண்டனர். காரியாதிகாரியும் கரைச்சிக் கிராமசபையும் வழங்கிய உதவிகளைக் கொண்டு ஒருவாரப் பொழுது கழித்தனர். சென்ற 13ந் தேதியன்று பிள்ளையார் பூஜை வைத்து தங்களுக்கு இனி வெள்ள அபாயம் ஏற்படக்கூடாதென வேண்டுதல்செய்து பாடசாலையை விட்டு வெளியேறினர்.

## ஐயாறன் எழுதுவது

இந்தஉலகத்தை எல்லாம் மறந்து முந்தாநாள்ஒரு தனி உலகத்துக்குச் சென்றிருந்தேன். எங்கு தெரியுமா? திருக்கேதீச்சரத்துக்குத்தான்.

சற்றும் எதிர்பாராத முறையிலே ஓர் அன்பர் காரில் அழைத்துச்சென்ருர். வழியிலேஓரிடத்தில்ஹோட்டலில் அன்பர் நுழைந்து பார்த்தார். தோசை முதலியன வைத்திருந்ததைப் பார்த்ததும், இதைச் சாப்பிடுவதைவிடப் பட்டினி கிடக்கலாமென்று திரும்பிவிட்டார்.

தேத்தண்ணீராவது சாப்பிடலாமென்று கேட்டால், பால் இல்லையாம். டின்பால் கூடக் கிடையாது. எங்கும் பசுக்கள் கூட்டம். பிள்ளையார் கோவிலுக்கு விட்ட பசுக்களாம். ஆனுல் அந்தப் பசுக்களில் பால கறக்க முடியாதென்று அறிந்தோம். பசுக்கள் மழை வெயிலுக்கு ஒதுங்க ஏதாவது பாதுகாப்புச் செய்யவேண்டும். முன் காலத்தில் தமிழகத்தில் ஒவ்வொருகோவிலாரும் ஒரு பசுமடம் கட்டியிருப்பர். பசுக்களைப் பேணிக்காப்பது, சைவ தர்மங்களில் முக்கியமானது. ஆனுல் ஈழத்தில் எந்தக கோவிலிலும் அவ்வித பசுமடங்கள் உள்ளனவா என்பதுதெரியவில்லை. பசுக்களைத்தப்பாது காக்காவிடில், அவை எப்படி, ஏன் பால் கொடுக்கும்?

வவுனியாவில் ஓர் ஓட்டல் சுத்தமாக இருந்தது. நல்ல பசும்பாலும கிடைத்தது அங்கு போத்தல் 40 சதத்துக்கு வாங்கலாமாம். வெளியே ஒரு பசுமாடு புரண்டு புரண்டு காலகளை இழுத்து இழுத்து மரணவாய்ப்பட்டது. முதல் நாளும் ஒரு பசு இப்படியே இறந்ததாம். காரணம் விசாரித்ததில், கிரிமிநாசினி வந்த சில டின்கள் உடைந்து, அந்த மருந்தைச் சில காகிதங்களில் துடைத்து எறிந்ததையும், அக்காகிதங்களைச் சில பசுக்கள் சாப்பிட்டதால்தான் அவற்றுக்கு இக்கதி ஏற்பட்டதாகவும் அறியவந்தது. அடபாபமே! கிரிமி நாசினிகள், நம் மாடுகளுக்கும் மக்களுக்கும் கூட எவ்வளவு ஆபத்தாகமுடிகின்றன.

ஃ ஃ ஃ

ஒரு வருடத்துக்குப்பின் திருக்கேதீச்சரம் சென்று பார்த்தேன். ஐந்தடுக்கு ராஜகோபுரம் எழுந்துவருகிறது. அம்மன் கோவிலுக்கான கருங்கல் வேலைகள் அநேகமாக முடிந்துவிட்டன சுவாமி கோவிலுக்கான கருங்கற்கள், வவுனியா, களுத்துறை இவ்விடங்களிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. சுமார் பத்துச் சிற்பாசாரிமார்கள் பழனியிலிருந்து வந்து மும்முரமாக வேலைசெய்துவருகின்ருர்கள்

மாலையில் பாலாவிக்குச் சென்றேன். இடுப்பளவுக்கு மேல் சுத்தமான ஜலம். ஸ்நானம் செய்யவெகுசுகம். அங்கே கட்டியுள்ள கரை மேல் அமர்ந்து அமைதியான அழகான அந்த இயற்கைச் சூழ்நிலையில் தியானம் செய்ய இந்த உலகமே மறந்து சொல்ல முடியாத இன்பம் ஏற்படுவதாகவுள்ளது.

அமெரிக்காவிலேபத்துக்கு எட்டுபேருக்கு மன நிம்மதி இல்லாமல், அவதிப்படுகிருர்களாம். இங்குள்ள பல

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆங்கிலம் யார்மீதும் திணிக்கப்படுவதாக உணரவேண்டிய தேவையில்லை

## பிரதமர் இந்திரா விளக்கம்

புதுடில்லி, டிசம்பர் 17

**ஆங்கிலம் யார்மீதும் கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது என்ற உணர்ச்சி வேண்டியதில்லை என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினர்.**

ஆங்கிலம் இந்தியாவில் நீண்ட காலமாக இருந்துவந்துள்ளதென்றும், அதைத் தொடர்ந்து நீடிப்பதால் சர்வதேச உறவுகளுக்கும், விஞ்ஞானப் படிப்புக்கும் பெரிதும் உதவுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாரணசி சமஸ்கிருத மாணவர் தூதுகோஷ்டி ஒன்றிடம் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.



### ரஷ்யாவில்

ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பகாலேயே, சோவியத் யூனியனில் பெரும்பான்மை மக்கள் அம்மொழியைக் கற்று வருவதாகப் பிரதமர் இந்திரா மேலும் குறிப்பிட்டார்.

இந்தியை இந்தியாவின் இணைப்பு மொழியாக்க, இந்தி பேசாத மக்களின் ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் தேவை என்று பிரதமர் கூறினர்.

### திணிக்கமுடியாது

இந்தியை எவர் மீதாவது திணிப்பதென்பது சாத்தியமில்லை. இந்தி பேசாத மக்கள், அம்மொழியைப் படிக்க, அவர்களுக்குப் போதிய அவகாசம் அளிக்கப்பட வேண்டும் என்ருர் திருமதி இந்திரா காந்தி.

### முன்ஷி கருத்து

லோக சபையில் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழி சட்டத் திருத்த மசோதா பற்றிச் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. ஜே. எம். முன்ஷி குறிப்பிடுகையில், இந்தியின் நிலை ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஆங்கிலத்தின் நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

### அன்பழகன் கண்டனம்

தி. மு. க. பிரதிநிதி திரு. அன்பழகன், ஆட்சி மொழி திருத்த மசோதாவுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களைக் கண்டித்தார். இந்திபேசாத மக்களுக்கு, தமது பிராந்திய மொழியுடன், மற்றுமொரு மொழி படிக்க வேண்டிய மேலதிக பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினர்.

---

சர்வதேச

## மீன்பிடி தொழில் பொருட்காட்சி

மாஸ்கோ, டிச.17

1968-ல் லெனின்கிராட்டில் நடைபெறவிருக்கும் சர்வதேசிய மீன்பிடித் தொழில் பொருட்காட்சியில் வர்த்தக உலகம் ஆர்வம் காட்டி வருகிறது. இந்தப் பொருட்காட்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி மார்ச் மத்திய பகுதி என்ற போதிலும், இப்பொழுதே 14 நாடுகளைச் சேர்ந்த 300 ஸ்தாபனங்கள் விண்ணப்பித்துள்ளன

மந்திரி அலெக்ஸாண்டர் இஷ்கோவ் தலைமையிலான அமைப்புக்குழு பொருட்காட்சியின் அளவை நிர்ணயித்து ளது. இது 27,000 சதுர மீட்டர் விஸ்தீரணத்தில் அமைக்கப்படும். பின்லாந்து விரிகுடாவில் 20 நவீன மீன்பிடிக் கப்பல்கள் நங்கூரம் செலுத்தி வைக்கப்படும்.

பொருட்காட்சி மண்டப நிர்மாண வேலைகள் ஆரம்பமாயிருப்பதாக சோவியத் மீன்பிடி தொழில் மந்திரி இலாகாவில் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் பகுதியே [350 பொருட்களுடனுனது] மிகப் பெரியதாக இருக்கும்.

சமுத்திர ஆராய்ச்சிக்கப்பலான 'அகடமிஷியன் கினிபோவிக்'கும், 3,700 தொன்கள் குளிர்சாதன இழுவைக் கப்பலும், மற்றும் கப்பல்களும் துறைமுகத்தில் நிறுத்தப்படும்.

மீன்களை மின் கருவிகளைக் கொண்டு கண்டுபிடிக்கும் சாதனமும், மற்றும் மீன்பிடித் தொழிலில் உபயோகிக்கப்படும் நவீன சாதனங்களும் சோவியத் மண்டலத்தில் காட்சிக்கு வைக்கப்படும்.

---

# உத்தர பிரதேசத்தில் அரசியல் நெருக்கடி

## முதல்மந்திரி ராஜினுமா செய்யலாம்

லக்னோ, டிசெ.17

உத்தரப்பிரதேச முதல் மந்திரி திரு. சாரண்சிங், ஆளும்கட்சியான சம்யுக்த விதாய தளைச் சேர்ந்த உறுப்புக் கட்சிகள் ஐக்கியமாகச் செயல்படாவிட்டால், தான் ராஜினுமாச் செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை முதல் மந்திரி தம்மிடம் கூறியதாக உத்தரப் பிரதேச பாரதீய கிராந்திதளின் காரியதரிசி தெரிவித்தார்.

இதுபற்றி ஓர் இறுதி முடிவு எடுப்பதற்கு, பாரதீய கிராந்தி தள்ளின்செயற்குழு இன்று கூடுகிறது.

இதற்கிடையில் ஆளும் கட்சிக்கு ஆதரவு அளித்து வந்த 16 சுயேச்சை அங்கத்தவர்கள், ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்புக் கட்சிகள் ஐக்கியமாக இயங்காவிட்டால் தமது ஆதரவை வாபஸ்பெறுவதெனத் தெரிவித்துள்ளனர்.

---

# மாற்று இருதயப் பொருத்த நோயாளிக்கு சன்னி

கேப்டவுண், டிசெ. 17

தென்னுபிரிக்காவில், கேப்டவுணில் அண்மையில் மாற்று இருதயப் பொருத்தம் செய்யப்பட்ட நோயாளியின் நுரையீரல்கள் இரண்டிலும் சன்னி பிடித்துள்ளதாக, அவர் தங்கியுள்ள ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இரு நுரையீரல்களிலும் பிடித்துள்ள சன்னியை 24 மணி நேரத்தில் தாம் நீக்கி விடுவதாக, மாற்றுஇருதயப் பொருத்தத்தைச் செய்த டாக்டர் தெரிவித்துள்ளாராம்.

---

ஜெய்பூரில்

# மாணவர் மீது பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகம்

ஜெய்பூர், டிசெ. 17

ஜெய்ப்பூரில், பொலிசாரின் தடையுத்தரவை மீறி ஊர்வலத்தில் சென்ற மாணவர்கள் மீது பொலிசார் கண்ணீர்ப்புகைப்பிரயோகம் செய்தனர்.

இம் மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆயுர்வேத டாக்டர் படிப்பு முடித்தவர்களுக்கு அதிக சம்பளம் வேண்டுமென்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்ருகும்.

மாணவர்கள் கற்களை வீசியதில், 6 பொலிசார் உட்பட 12 பேர் காயமுற்றனர்.

---

# இந்தியக் கப்பல் புயலில் சிக்கியது

## ஒருவர் மரணம்

டெஹ்ரான், டிசெ. 17

இந்தியப் படகொன்று அம்மான் விரிகுடாவில் புயலுக்குள் சிக்கி மூழ்கியதாக ஈரான் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இப்படகில் 141 பேர் சென்றதாகவும், படகு கவிழ்ந்ததால், ஒருவர் நீரில் மூழ்கி மரணமாகி விட்டாரெனவும், ஏனைய பிரயாணிகள் அனைவரும் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் அப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

---

## தபால்பெட்டியின் நிலை

குரும்பசிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு முன்னுல் உள்ள தபால் பெட்டி எந்நேரமும் தினமும் திறந்த நிலையில் காணப்படுகின்றது. இதனுல் பொது மக்கள் தபால்களை அனுப்புவதற்கு கஷ்டப்படுவதுடன்தூர இடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. திருத்தம் எதுவும் செய்யப்படாது கவனிப்பு இன்றி இருக்கின்றது. தபால் பகுதியினரின் பாராமுகம் குறித்து மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

---

# கொய்னு பூகம்பத்தால் நிலத்தில் 85மைல் நீளப்பிளவு

பம்பாய், டிச. 17

அண்மையில் கொய்னு நகரில் ஏற்பட்ட பூகம்பத்தினுல், 85 மைல் நீளமான வெடிப்பொன்று பூமியில் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிப்பின் ஆழம் 6 அடி, அகலம் 6 அங்குலம்.

இப்பகுதியில் உள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது பற்றி புவியியல் நிபுணர்கள் இப்போது ஆராய்ந்துவருகிருர்கள்.

---

## இருதய அறுவை சிகிச்சை

### புதிய கருவி

மாஸ்கோ, டிச.17

இருதய அறுவைச் சிகிச்சைகளில் பாவிக்கப்படும் இருதய உட்புற விரிவுமானி எனும் புதிய கருவி ஒன்று மாஸ்கோ பிரதேச ஆராய்ச்சி நிலையத்தின் மார்பு, நாள் சிகிச்சை விடுதியொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருதயத் தசை நார்களின் உடற் கூறுமாற்றங்களுக்கமையபின்னிப்பிணைந்த மிட்ரல் குழாயை விரிவடையச் செய்வதில் விரிவுமானி வைத்தியருக்கு உதவுகிறது. கைப்பிடிகளுக் கிடையேயுள்ள சிறிய ஆணி, கருவியின் நுனியிலுள்ள உதடுகளை மிகக் கவனத்துடன் இயக்குவதற்கு உதவுகின்றது.

புதிய விரிவு மானியின் உதவியினுல்இந்த மருத்துவ விடுதியில் நூற்றுக்கு மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள் வைத்தியர்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன இந்தப் புதியவிரிவுமானியின் அமைப்பு பேராசிரியர் வையாசெஸ்லாவ் பிரான்டசேவ்வினுலும், பட்டதாரி மாணவரான திமித்திரி கொரிலென்கோவினுலும் ஆக்கப்பட்டது. இதுசோஷலிஸ உழைப்பு வீரரான சேர்ஜி பவ்லோவினுல் தயாரிக்கப்பட்டது.

---

## திருவெம்பாவை

காரைநகர், ஞாயிறு

காரை நகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் ஒன்பதாவது நாள் திருவெம்பாவைப் பூசை சைவ இளைஞர்களின் ஆதரவின்கீழ் இன்று நடைபெற்றது. செல்வன் தியாகராசாவேலுப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் ஆகியோர் திருவெம்பாவை ஓதினர்கள்.

---

## விசுவமடுவில் பயிர்நாசம்

தருமபுரம், ஞாயிறு

பிரதான வாலியர் குடியேற்றத் திட்டமான விசுவமடுவில் சகலவிதமான பயிர்களும் வெள்ளத்தால் நாசமாயின. மாரிகாலத்தில் நெல் விதைப்பு நடத்தினுல் இருகால மாற்றுப்பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்கலாமென அபிப்பிராயப்படுகின்றனர்.

---

# தெ.மே. ஆபிரிக்காவிலிருந்து தென்னுபிரிக்கா உடனடியாக வெளியேற வேண்டும்

## ஐ. நா. பெதுச்சபைத் தீர்மானம்

நியூயோர்க், டிசெ. 17

**தென்மேற்கு ஆபிரிக்காவிலிருந்து தென்னுபிரிக்கா எவ்வித நிபந்தனையுமின்றி, உடனடியாக வெளியேறவேண்டுமெனக்கோரும் தீர்மானமொன்று ஐ. நா. பொதுச்சபையினுல் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இத்தீர்மானத்துக்குச்சாதகமாக 92 நாடுகள் வாக்களித்தன. தென்னுபிரிக்காவும், போர்ச்சுக்கலும் மட்டுமே தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. பிரிடன், அமெரிக்கா, பிரான்ஸ் உட்படச் சில நாடுகள்வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

மற்றுமொரு தீர்மானத்தில் தென்மேற்கு ஆபிரிக்கா சம்பந்தப்பட்ட தனது பொறுப்புகளை ஐ. நா. சரிவர நிறைவேற்ற அதிகாரம் அளிக்கப்படவேண்டுமெனக் கோரப்பட்டது.

தென்மேற்கு ஆபிரிக்காவில் தென்னுபிரிக்கா இருப்பது, தெ. மே. ஆபிரிக்காவின் சுதந்திர உரிமைகளின் அப்பட்டமான அத்துமீறலாகும் என அத்தீர்மானத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'விடுதலை செய்யவும்'

அண்மையில் பிரிட்டோரியாவில் [illegible] விசாரணையில் [illegible] டனை விதிக்கப்பட்ட இல் தெ. மே. ஆபிரிக்க தேசியவாதிகளை தென்னுபிரிக்கா உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்றும் ஐ. நா. பொதுச்சபை கேட்டுக்கொண்டுள்ளது. அந்த விசாரணை, சட்ட விரோதமானதொன்று எனச் சபை தெரிவித்தது.

### வர்த்தக மாநாடு

ஐ. நா, பொதுச்சபை நிறைவேற்றிய மற்றுமொரு தீர்மானம், அடுத்த பெப்ரவரியில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஐ. நா. வர்த்தகம், அபிவிருத்தி மாநாட்டின் வெற்றியை உறுதிப்படுத்த தக்க நடவடிக்கைகள் [illegible] வேண்டுமென வலியுறுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

**றோயல் டிஸ்பென்ஸறி**

PHONE 397 JAFFNA

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 18-12-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

*344 மீற்றர் & 61 மீற்றர்*

காலை 6-25 திருவெம்பாவை — வெள்ளவத்தை மாணிக்கவிநாயகர் ஆலயத்திலிருந்து அஞ்சல், 7-20 தினக்குறிப்பு, 7-30 உரைச்சித்திரம், 8-00 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

*344 மீற்றர் & 49 மீற்றர்*

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

*344 மீற்றர் & 61 மீற்றர்*

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 புல்லாங்குழலிசை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பா வளம், 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 யுனேஸ்கோ உரைச்சித்திரம், 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்தஇசை.

## எச்சரிக்கை

புலோலி, ஞாயிறு

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களைப் பார்வையிடவரும் உறவினர்களின், நண்பர்களினதும், சைக்கிள் வண்டிகளைப் பாதுகாப்புடனும் கவனத்துடனும் கவனமான இடத்தில் வைத்துக் கொள்ளும்படி பொலிஸார்கேட்டுக் கொண்டுள்ளனர். ஆஸ்பத்திரியில் அடிக்கடி சைக்கிள்கள் திருட்டுப் போவதாகப் புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

# திருக்குர்ஆன் விழா குழு

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 30ந்தேதிஆரம்பமாகும் திருக்குர்ஆன் 1400 வது வருடவிழாவை யாழ். நகர் முஸ்லிம்கள் கொண்டாட யாழ். முஸ்லிம் சமூக சேவா சங்கம் ஒரு விழாக் குழுவை நியமித்திருக்கிறது.

தலைவர்: ஆலிஜனுப், என். எம். முகமது மீரான் முகியிதீன் ஆலிம், உப தலைவர்கள்: மவ்லவி ஓ. எம். அப்துல்றஸாக், ஜனுப் எம். எம். சரீபு, வி. எம். முத்துராஜா.

இணைக்காரியதரிசிகள் எம். எஸ். எஸ். அப்துல் காதர், ஏ. எம். எஸ். முஹியிதீன், என். எம். ஏ. குத்தூஸ், தனாதிகாரிகள்: ஜனுப் எம். எம். எஸ். அப்துல்காதர், எம். எச், எம். அப்துல்றஸாக் எம். மதார், யூ. எம். ஐ. சாகுல் ஹமீது, நிர்வாகக் காரியதரிசி ஜனுப். மு இ. ஷாஹுல்.

## முதலிடம்

தருமபுரம், ஞாயிறு

கிளிநொச்சிப் பகுதிகளை பிடுங்குதல் போட்டி ஒன்று கிளிநொச்சிப் பகுதியில் உள்ள சகல பாடசாலைகளிடையே நடைபெற்றது. இதில் தருமபுரம் அரசினர் 2-ம் இலகக தமிழ்க் கலவன் பாடசாலை முதலிடம் பெற்றது.

இப்பாடசாலையின் மாணவர்கள் தமது பாடசாலை காணி மூன்று ஏக்கர் நிலத்தையும் சிறந்த முறையிற் பண்படுத்தியுள்ளார்கள்.

**சிறந்த ஜெம்ஸன் உங்களுக்கும் உங்கள் மகனுக்கும் சேட், கால்சட்டை (Trouser)**



GEMSUN GARMENTS

X சுருங்காதது
X இறுக்கமானது உறுதியானது
X விசேஷ உறுதியான பொக்கட்டுகள்
X அளவும் திறமையும் ஒருபோதும் மாறாதது
X பிழையான வேலை இல்லை என்ற உத்தரவாதம்
X ஒவ்வொரு சிறந்த கடையிலும்கிடைக்கும்.

வியாபாரிகள்

வலிகாமம் கிழக்கு,
ப. நோ. கூ. ச. சமாஜம்,
நீர்வேலி.

யாழ்ப்பாணம்:
தொலராம்ஸ், பிரதானவீதி.
தயராம்ஸ், பிரதான வீதி.
பொகுமால்ஸ், பிரதானவீதி.

பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை

X திருக்கோணமலை
X மட்டக்களப்பு
X கல்முனை
X அம்பாறை
X மன்னார்
X காங்கேசன்துறை

வர்த்தக விசாரணைகள்:-
லக்கிபைவ் இண்டஸ்றீஸ்
155, பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்:- 3184
கால்சட்டை, அரைக்காற்சட்டை, சேட்டுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினசபை வல்வெட்டித்துறை
# கேள்வி விளம்பரம்

வல்வெட்டித்துறைப் பட்டினசபைத் தலைவரால் வல்வெட்டித்துறைப் பட்டின சபையின் மீன் சந்தைக்குள் இருக்கும் இரண்டு ஆட்டிறைச்சிக் கடைகளிலும் 1968-ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31-ந் திகதிவரைக்கும்வியாபாரம் செய்யும் உருத்திற்கு 'சீல்' வைத்த கேள்விப்பத்திரங்கள் 1967-ம் ஆண்டு மார்கழி மாதம் 22-ம் திகதி முற்பகல் 10-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 21-12-67-ம் திகதி பிற்பகல் 2 மணிவரை பத்திரப்பணம் ரூபா 5/-ம் வைப்புப்பணம் ரூபா 25/-ம் செலுத்தி இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடையின் வாடகை மாதாமாதம் ரூபா 10/- கட்டவேண்டும். அத்துடன் வாடகை பிணைப்பணம் ரூபா 30 கட்டி கூடிய கேள்விக்காரர்கள் உரிய ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடல்வேண்டும்.

மேலும் இதைப்பற்றிய விபரங்களை இக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் செயலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

வி. இரத்தினவடிவேல்
தலைவர்,
பட்டினசபை,
வல்வெட்டித்துறை.

பட்டினசபைக்காரியாலயம்,
வல்வெட்டித்துறை.
7-12-67. 377

# இடமாற்றம்

நாவற்குழி, திங்கள்

வடபகுதிக் கல்விக் கந்தோரில் கடமையாற்றிய திரு. சி. சின்னத்தம்பி தை மாதம் 1ந் தேதி தொடக்கம் கொழும்பு தேசிய நூதனசாலைக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

# ஐயாறன்

2-ம் பக்கத்தொடர்ச்சி

ருக்கு மன அமைதி இல்லை. மன அமைதி வேண்டுபவர்கள், மனநோய் நிபுணர்களிடம் செல்லுவதைவிட, திருக்கேதீச்சரத்துக்குச் சென்று ஒருவாரம் தங்கி இருந்துவிட்டுவந்தால் கவலை எல்லாம் மறந்து, புதிய அமைதியும், புதுசந்துஷ்டியும் ஏற்படுகிறது.

இந்த குட்டி யாத்திரை பற்றி நாளை தொடர்ந்து எழுதுகிறேன்.

ஃ ஃ ஃ

அங்கத்துறுநோய்கள் அடியார்மேலொழித்தருளி
வங்கம் மலி கின்ற கடல்
மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின்
கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த
திருகேதீச்சரத்தானே.

—ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[தம் அடியார்கள் மேலனவாய் அவர்களது உடம்பிற் பொருந்துகின்ற நோய்களை முற்றாகக் களைந்து அருளுவானாகிய சிவபெருமான் மரக்கலங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்டம என்னும நகரத்தில், தன் திருமேனியின் ஒரு கூற்றை அழகுசெய்கின்ற மங்கை ஒருத்தியுடன், பாலாவியாற்றின் கரைமேல், தென்னஞ்சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்றான்]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# "நாவலருக்கும் சிலை எடுங்கள்"
## அண்ணாவிடம் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

தமிழன்னையன் முன்னேற்றத்துக்காக தியாகம்செய்த நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களுக்கு தமிழ்நாட்டில்சிலை எடுக்குமாறு தமிழக முதல் அமைச்சர் திரு சி.என். அண்ணாதுரையை இலங்கைநடைமுறைத் தமிழ் இயக்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. அண்ணாதுரைக்குஇவ் வியக்கத்தார் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'சங்ககாலத்துக்குப் பின்னுள்ள காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள் வரிசையில் சேர்க்கப்படவேண்டியவர்களின் பட்டியலில் பல ஈழத் தமிழறிஞர்களின் பெயர்களும் இடம்பெறும் என்பது தாங்கள் அறிந்த ஒன்றே. இப்பெருமக்கள் பலருள்ள 19-ம் நூற்றாண்டில் தோன்றி தமிழ் உரைநடையின் தந்தையெனப் போற்றத்தகும் வண்ணம் நூல்கள் பலஇயற்றியும், பழைய நூல்கள் பலவற்றிற்கு உரையெழுதியும் தொல்நூல்களை நன்முறையில் அச்சிட்டும், பள்ளிக்கூடங்களை நிறுவியும், தமது வாழ்நாள் முழுவதையும் தமிழன்னையின் முன்னேற்றத்திற்காக தியாகம்செய்த நல்லூர் ஆறுமுகநாவலரை சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர் சிதம்பரத்தில் அச்சகம், பள்ளிக்கூடம் நிறுவி தமிழகத்தில் தொண்டாற்றியதை தமிழ் இலக்கியவரலாறு நன்கறியும். இத்தகைய தமிழ்ப் பேரறிஞருக்கும் சிலை எடுக்கவேண்டுமென்பதே எமதுகோரிக்கையாகும்.' —— [நி]

## விளையாட மைதானமில்லை

புலோலி, ஞாயிறு

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள புலோலி அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு ஒரு விளையாட்டுமைதானம் இல்லாததால் மாணவர்கள் ஒழுங்காக விளையாடவோ, தேகப்பயிற்சி செய்யவோ முடியாத நிலையில் இருந்து வருகிறார்களாம், இவ்விஷயம்பற்றி மேலதிகாரிகளுக்குப் பலமுறை அறிவித்தும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை யெனத்தெரிய வருகிறது.

## புகையிரத நிலையம் விஸ்தரிக்கப்படும்

அளவெட்டி, ஞாயிறு

புகையிரதப் பிரயாணிகள் நலன்கருதி மாவிட்டபுரம் புகையிரத நிலைய மேடையை விஸ்தரிப்புச் செய்து தரும்படி மயிலிட்டி கிராமசபையினர் புகையிரதப்பகுதிப் பொதுமுகாமையாளரையும், காங்கேசன் துறைப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும கேட்டிருந்தனர்.

இதையடுத்து புகையிரதப்பகுதி முகாமையாளரும் எஸ். ஜே. வி. செல்வநாயகமும் நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

## ஆஸ்ரேலிய....

1-ம் பக்கத் தொடர்ச்சி

நகரமே உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கான்பெராவில் நிலைமை மோசமாகியிருப்பதால் உதவிப் பிரதமர் திரு. மெகவான் கான்பெராவுக்கு விரைந்துள்ளார்.

## வாடகைக்கு

வீடு

சகல நவீன வசதிகளுடனும் தொலைபேசியும் உள்ள வீடு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்னுகை, வேம்படி மகளிர் கல்லூரிக்குப் பக்கத்தில் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: செ. நடராசா, 193, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி 7167) 2185

சுன்னுகம் சந்தையின் தெற்கெல்லையில் "சுகந்தி" என்ற மேல்மாடி வீடு சகல வசதிகளுடனும் ஜனவரி தொடக்கம் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: பத்மநாதன், சந்தை ஒழுங்கை, சுன்னுகம். 2189

## கல்வி

உயர்தர வகுப்பு-கணக்கியல்/கலைப்பிரிவு, விசேஷ பட்டதாரிகளினுல் வகுப்புகள் நடாத்தப்படும். தங்கும் விடுதி வசதிகள் உண்டு. 1968-ம் ஆண்டு வகுப்புகளுக்கு மாணவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். யூனைடெட் இன்ஸ்டிரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ பிரதான வீதி, முள்ளியவளை/179, பிரதான வீதி, கல்முனை. 2179

# விற்பனை ஏஜண்டுகள்

முன் எப்பொழுதும் இல்லாத மிகப் பரந்த அளவில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப் பெறவிருக்கும் "ஜாதிக சம்பத" சீட்டிழுப்புக்கான ரூபா 2/- விலையுள்ள டிக்கெற்றுகளை விற்பனைசெய்ய விரும்பும் பொது நலச்சங்கங்கள், சபைகள். தாபனங்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலில் ஆகக்குறைந்தது 100 டிக்கெற்றுகளையாவது பணங்கொடுத்து வாங்குவதற்கு ஆயத்தமானோர் மட்டும் பின்வரும் விபரங்களைக்காட்டி விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்:

(அ) பெயரும் முகவரியும்:

(ஆ) பாராளுமன்றத் தொகுதி:

(இ) இப்போதைய தொழிலும் வருமானமும்:

(ஈ) விற்பனைக்களத்தில் வாழ்ந்த அல்லது தொழில் புரிந்த காலம்:

(உ) விண்ணப்பகாரரைப்பற்றி விசாரித்தறிய இருவர் பெயரும் முகவரியும்:

(ஊ) 'ஜாதிக சம்பத' டிக்கெற்றுகள்எங்ஙனம் விற்பனை செய்யப்படும் என்பது பற்றிய விவரச் சுருக்கம்

நியமிக்கப்பட்ட விற்பனை ஏஜண்டுகளுக்கு 12 சதவீதமான கமிஷன் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் தேதி பிற்பகல் 4-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை அனுப்புவோர், கடித மேலுறையின் இடதுபக்கமேல் மூலையில் 'ஜாதிக சம்பத' என்று எழுதி அனுப்புதல் வேண்டும்.

பொது மேலாளர்,
தேசீய லொத்தர்ச் சபை,
502/1 காலி வீதி,
கொழும்பு-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோக்சபையில்

# ஆட்சிமொழி திருத்த மசோதா நிறைவேறியது

## தி. மு. க. வெளிநடப்பு

புதுடில்லி, டிச. 16

இந்திய ஆட்சிமொழி சட்ட திருத்த மசோதா இன்று இந்திய லோக்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 205 பேரும் எதிராக 41 பேரும் வாக்களித்தார்கள்.

மசோதாவுடன் இணைந்த மொழிபற்றிய தீர்மானத்தையும் ஒரு திருத்தத்துடன் லோக்சபை ஏற்றுக்கொண்டது. மத்திய அரசாங்கத்தில் தொழில்செய்யும் எவரும் இந்தி அல்லது ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்பதே அத்திருத்தம்.

மசோதா நிறைவேறுவதற்கு முன்பே தி. மு. க. அங்கத்தவர்களும் ஜன சங்க அங்கத்தவர்களும் வெளியேறினர்கள்.

அரசாங்கதரப்பில் மொத்தம் 5 திருத்தங்களை சபை அங்கீகரித்தது.

இந்திமொழி ராஜ்யம் ஒன்று இந்திமொழி இல்லாத ஒரு ராஜ்யத்துக்கு கடிதம் எழுதும்போது இந்திமொழியுடன ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரதியும் இணைக்க வேண்டும் என்பது ஒரு திருத்தம். இந்திபேசாத ஒரு ராஜ்ய அரசாங்கம் இந்தி பேசும் ஒரு ராஜ்யத்துக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதும்போது இந்தி மொழிபெயர்ப்பு இணைக்க வேண்டும் என்பதில்லை என்றுதிருசவான் விளக்கினர்.

## பாலம் உடைந்து 100 பேர் பலி

நியூயார்க். டிச. 16

அமெரிக்காவில் வேர்ஜினியா என்ற இடத்தில் ஒரு பாலம் உடைந்ததின் காரணமாக சுமார் 100 பேர் மாண்டதாக அறியப்படுகின்றது.

## கொலைகள் அதிகரிப்பு

கொழும்பு, சனி

இவ்வருடத்தில் இதுவரை 724 கொலைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

சென்ற வருடத்தைவிட இவ்வருடத்தில் இதுவரை 90 கொலைகள் அதிகம்.

ஊறணி

## கடற்கரையில் அணை கட்டப்படும்

அளவெட்டி, சனி

காங்கேசன்துறை ஊறணிக் கரைப் பகுதியில் வாழும் மக்களுக்கு கடல் அரிப்பால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் போக்க கடலை அடுத்த கரைப்பகுதியில் அணை கட்ட நடவடிக்கை எடுப்பதாக வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தம்மைச சந்தித்த தூது கோஷ்டியிடம் கூறினர்.

ஊறணி புனித அந்தோனியார் கிராமமுன்னேற்ற சனசமூக நிலையத்தைச் சேர்ந்த வணபிதா பி. எஸ் மரியதாசன், திரு. ம. மரியாம்பிள்ளை, திரு. மு. செல்வராசா, திரு. பி. நேசமுத்து ஆகியோர் தூதுகோஷ்டியில் இடம்பெற்றனர். ஊறணியின் அபிவிருத்தி பற்றிய வேறு பல விஷயங்களும் பேசப்பட்டன.

---

திருகோணமலை, சனி

திருகோணமலை சைவ மகளிர் மன்றம் இங்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது அங்குரார்பணக் கூட்டத்தின்போது கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்படனர்.

---

### பெரியபுராணத்தில்...

[1-ம் பக்க தொடர்ச்சி)

இப்போட்டிக்கான திட்டத்தையும், நிபந்தனைகளையும் மன்றத்தின் செயற்குழு இம்மாதம் 16ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கூடி ஆலோசனை செய்து அங்கீகரித்துள்ளது. போட்டிப் பரீட்சைக்குரிய பாடப் புதகத்தையும் அச்சிட்டு வெளியாக்குவதெனவும் செயற்குழு தீர்மானித்தது.

---

### நர்வலரை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளார்.

அத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"இச்செயலைக் கண்டு நாவலர் நூற்றுண்டுச்சபை அதிர்ச்சி அடைந்துள்ளது. புகழ்பெற்ற பிற தமிழ்த் தலைவர்களுடன் தமிழுக்காக அல்லும் பகலும் அயராதுழைத்த நாவலர் பெருமானைத் தவிர்த்திருப்பது கவலைக்குரியதாகும். பெருமானுர் ஆற்றிய தொண்டு உலகத்தாராலேயே புகழ்கின்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. அவர் தமிழ்த் தந்தையாகவும் செயல் வீரனுகவும் விளங்கினுர். ஆகையால் இதுசம்பந்தமாக மறு பரிசிலனைசெய்யும்படி தங்களைக் கேட்டுக்கொள்கின்ருேம்"


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறை தினங்களில் 2-30
மனேகர்-விஜயலட்சுமி
நடித்த
வல்லவனுக்கு வல்லவன்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Christopher Lee
in
Devil Ship Pirates
[Color & Scope]

REGAL JAFFNA
Daily at 10-30 A. M
4-45, 7-00 & 9-45 P.M.
SEAN CONNERY
AS Agent 007
in
GOLDFINGER


## வேலை தேடி வெளியூர் செல்லும் தோட்டத் தொழிலாளருக்கு தடை

நாவலப்பிட்டி, ஞாயிறு

வேலைதேடி வவனியாப் பிரதேசத்திற்கு செல்வதில் ஆர்வம்காட்டி வருகிருர்கள் தோட்டத் தொழிலாளர் இதைத தடுப்பதற்காக தோட்டத்துரைமார் பல உபாயங்களைக் கையாண்டு வருகிருர்கள் என்று கூறப்படுகிறது.

"தோட்டப் பகுதியில் உள்ள தொழிலாளர் வேலைதேடி வவனியாவிற்குச் சென்ருல் தோட்டத்தில் உள்ள பற்றுச் சீட்டுகள் வெட்டப்படும் என தொழிலாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனராம்.

அட்டன், தலவாக்கலை, மஸ்கெலியா, வட்டகொட ஆகிய பகுதிகளில் உள்ள தோட்டத்தொழிலாளர்கள் தங்கள்வாழ்க்கைச்செலவை சமாளிக்கமுடியாமல் வவனியா போன்ற பலபகுதிகளுக்கும் சென்று உழைத்துத் திருப்புகின்றனர்.

### புங்குடு............

[1ம் கலத் தொடர்ச்சி]

விட திறமை கூடிய நால்வர் இங்கு வருவர். இவர்கள் இலங்கை வந்ததும் பெற்ருேல் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் பத்துப் பன்னீராயிரம் அடி ஆழத்தில் கிண்டப்பட்டு அவ்விடங்களில் கட்டடங்கள் ஆரம்பமாகும். மற்றும் சந்தேகத்துக்குரிய இடங்களில் திரும்பவும் இங்கேயே முழு ஆராய்ச்சியும் நடைபெறும்.

இம்மாதம் 7-ம் திகதி இரண்டாவது முறையாக மன்னுர் சென்ற பிரெஞ்சு நிபுணர் ஒருவரும் பெற்ருேலியம் கூட்டுஸ்தாபனத்தாரும் சென்ற இரண்டு ஜீப் வண்டிகளும் கௌகாரி முனையில் புதைந்து நீரில் ஆழ்ந்துள்ளன. இவர்களில் சுமார் 20 பேர் மூன்று நாட்களாக சாப்பாடு இல்லாமல் இருந்தனர். இறுதியில் அருகாமையிலுள்ள இராணுவ முகாமில் தஞ்சம் புகுந்துள்ளதாக நமது நிருபரிடம் ஒருவர் கூறியுள்ளார். ரூபாய் ஆயிரத்திற்கு மேற்பட்ட உபகரணங்கள் வெள்ளத்தால் எடுக்க முடியாமற் போய் விட்டதாகவும் தெரிய வருகிறது.

காரைநகரிலிருந்து, ஊர்காவற்றுறை கடற்படையின் உதவியுடன் பிரெஞ்சு நிபுணர்களும் பெற்ருேலியம் கூட்டுஸ்தாபனத்தாரும் அடுத்த வாரத்தில் கடலில் ஆராய்ச்சி நடாத்தவிருக்கின்றனர். காரைநகர் கடற்கரையிலிருந்து ஆரம்பமாகும் இவ்வாராய்ச்சி கீரிமலை காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களின் கடல் மார்க்கமாகச் செல்லும் பாதை இந்தியக் கரையை அண்டி முடிவடையும். இவ்வித ஆராய்ச்சி இந்தியாவிலிருந்து வரும் பெற்ருேல் ஊற்று என்பதைக் கண்டுபிடிக்க நடைபெறவிருப்பதாக அறியப்படுகிறது.

எண்ணெய் ஊறுவதாகத் தெரிய வந்த இடங்களில் உள்ள மண், கல் ஆகிய பொருட்கள் பிரெஞ்சுக்கு அனுப்பப்படுகிறது

### நெஸ்ரரே...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறையிலுள்ள ஒரு வர்த்தகர் பம்பாய் வெங்காயம், பால்டின், சீனி ஆகியவற்றைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூட்டி விற்றதாக சிக்கியுள்ளார். ஊர்காவற்றுறையிலுள்ள இரு கடைகளிலும், ஒரு பேக்கரியிலும் பாணைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூட்டி விற்றதாகச் சிக்கியுள்ளனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பண்டாரவளை]



சந்திரபாபு—கே. ஆர். விஜயா
சாவித்திரி - மனேகர் - விஜயஸ்ரீ
ராஜன்- "சோ" நம்பிராஜன்
ஸ்டன்ப் சோமு-எம். ஆர். ஆர். வாசு
ஆகியோர் நடித்த விஸ்வபாரதியின்
தட்டுங்கள் திறக்கப்படும்
திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
ரவிச்சந்திரன் — ராஜஸ்ரீ
நடித்த
காதலிக்க நேரமில்லை


## சுருட்டு உற்பத்தியாளர் சங்க காரியதரிசி அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சுருட்டு உற்பத்தியாளர் சுமார் எழுபதுக்கு மேற்பட்டோர் கையொப்பமிட்டு சுருட்டுத் தொழிலாளர் சம்பள உயர்வு சம்பந்தமாக ஓர் அறிவித்தலை வெளியிட்டுள்ளனர்.

சுருட்டு உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள், இலங்கைச் சுருட்டுத்தொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, எல்லாத் தர சுருட்டுக்களுக்கும் ஆயிரத்துக்கு பன்னிரண்டு ரூபாய் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிற தென்றும் இதன்படி நேற்று சனிக்கிழமைதொடக்கம்தொழில் நடாத்த முடிவு செய்திருப்பதாகவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுருட்டு உற்பத்தியாளர் சங்கக் காரியதரிசி. திரு. சி. ஆ. த. வடிவேலு இவ்வறிவித்தலை வெளியிட்டிருக்கிருர்.

இந்த அறிவித்தலில் கையொப்பமிட்டுள்ள உற்பத்தியாளர்களிடம்தான் பெருந்தொகையான தொழிலாளர் தொழில் செய்வதாக திரு. வடிவேலு தெரிவிக்கிருர்.

இலங்கை ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர் தமது சம்பளத்தை அதிகரிக்கவேண்டுமெனக் கோரினர். அவர்கள் சென்ற சில தினங்களாக வேலைநிறுத்தமும் செய்துவருகின்றனர். இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் தொழிற்கந்தோரில் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில்இருதரப்பினருக்கிடையிலும் பேச்சுவார்த்தை நடைபெற்றும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. ஆயினும் உற்பதியாளர்சங்கபிரதிநிதிகளும் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர். ரூபாய்மதிப்புக் குறைவையும் விலைவாசி உயர்வையும் கருத்தில்கொண்டு சம்பள உயர்வுக்கு உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் சம்மதித்தனர். இதன்படி ஆயிரத்துக்கு பன்னிரண்டு ரூபாய் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கையெக்ப்பமிட்டனர் என்றும் திரு வடிவேலு தெரிவித்தார்.

## இவர்கள் நிலை என்ன?

புன்னலைக்கட்டுவன், சனி

இரண்டாம்தரப் பாடசாலை அதிபர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பல ஆசிரியர்களும் வெளிமாகாணங்களுக்கு உதவி ஆசிரியராக மாற்ற உத்தரவுகள் பெற்றுள்ளனர். இவர்களுக்கு அதிபர் நியமனங்கிடைக்குமா வென்றும், அவ்வாறுயின் எப்பொழுதுகிடைக்மென்றும் இதுவரை தெரியவில்லை. சிலவேளை இம்மாற்றம் மூலம் அவர்கள் ஏமாற்றமடைவார்களோ என்றும் அசிரிய வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

## உடன்பாடு வாபஸ்

யாழ்ப்பாணம், சனி

சுருட்டுத் தொழிலாளர் சம்பளம் சம்பந்தமாக சுருட்டு உற்பத்தியாளர் சங்கத்துடன் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்ட உடன்பாட்டை தாம் இன்று வாபஸ் பெற்றுள்ளதாக இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு. கே. முதலியார் தெரிவித்துள்ளார். அந்த உடன்பாட்டில் 1000 சுருட்டுகளுக்கு 12 ரூபாய்க்கு சம்மதித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது நிர்வாகக்கமிட்டியுடன் கலந்தாலோசிக்காமல் செய்துகொண்ட முடிவு என்றும் அதன் காரணமாக அம்முடிவை தாம் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் முதலியார் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 18-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org